**வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திருமதி. எஸ். மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**
**ந.க.எண்:1643/Voc /Dc4/SS/2023, நாள்:12.10.2023**

பொருள் : ஒருங்கிணைந்த பாள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி பாடப்பிரிவில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் தொழிற்கல்வி சார்ந்த நேரடி அகப்பயிற்சி (Internship) மேற்கொள்ளுவதற்காக தேவைப்படும் நிதியினை விடுவிக்க மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை : மாநில திட்ட இயக்ககம், சென்னை–600006, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் கடித ந.க.எண்.3697/A11/Voc/SS/2023, நாள்:10.10.2023.

------

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வேலூர் மாவட்டம், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பில் தொழிற்கல்வி பாடப்பிரிவில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் 03.10.2023 முதல் 20.10.2023 வரையிலான நாட்களில், 10 நாட்களில் 80 மணி நேரம் தொழிற்சாலைகளுக்கு சென்று நேரடி அகப்பயிற்சி (Internship) மேற்கொள்ளுவதற்கான வழிக்காட்டுதல்கள் மற்றும் அதற்கேற்ப மாணவர்கள் அகப்பயிற்சி மேற்கொள்ளுவதற்கு தேவைப்படும் நிதி வட்டாரங்களுக்கு விடுவிக்கப்படவுள்ளது. அகப்பயிற்சியின் பொழுது மாணவர்களுக்கு வழிக்காட்டும் விதமாக ஒரு "அகப்பயிற்சி துணைவன்" என ஒரு கையேடு ஆங்கில வழி மற்றும் தமிழ் வழியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் அகப்பயிற்சியின் நோக்கம், அகப்பயிற்சிக்கான பயன்கள், மாணவர்கள் அகப்பயிற்சியின் அனுபவ பகிர்வுகள், அகப்பயிற்சியின் பொழுது தினமும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய படிவங்கள் போன்றவைகள் இடம் பெற்றிருக்கிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள (Annexure 1) இக்கையேடு ஒவ்வொரு மாணவனுக்கும் பிரதி / நகல் எடுத்து வழங்கப்பட வேண்டும்.

அகப்பயிற்சிக்காக மேற்கொள்ப்பட வேண்டிய செலவின விவரம் பின்வருமாறு:

1. அகப்பயிற்சிக்கா(Internship) சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் / நிறுவனங்களுக்கு 10 நாட்கள் சென்று வருவதற்கான போக்குவரத்து செலவினம் மற்றும் இதர செலவினங்களுக்காக Internship for vocational education (VE) தலைப்பின் கீழ் மாணவர் ஒருவருக்கு ரூ.750/– வழங்கப்படுகிறது.
2. 40 பக்கங்கள் கொண்ட "அகப்பயிற்சி துணைவன்" கையேட்டினை Black & white யில் பள்ளி மூலமாக பிரதி / நகல் எடுத்து மாணவர்களுக்கு வழங்க Raw material grant தலைப்பின் கீழ் மாணவர் ஒருவருக்கு ரூ.40/– வழங்கப்படுகிறது.
3. அகப்பயிற்சியினை வெற்றிகரமாக 10 நாட்களும் மேற்கொண்ட மாணவர்களுக்கு கல்வித் துறை சார்பாகவும் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். பள்ளிகள் மூலமாக சான்றிதழ் அச்சிட்டு வாங்குவதற்கான செலவினமாக Raw material grant தலைப்பின் கீழ் மாணவர் ஒருவருக்கு ரூ.10/– வழங்கப்படுகிறது. சான்றிதழுக்கான வடிவமைப்பு அனுப்பப்படும்.

12 ஆம் வகுப்பு தொழிற்கல்வி பிரிவுகளில் பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஒன்றிய வாரியாக செலவினம் கணக்கிடப்பட்டு விடுவிக்கப்படவுள்ள தொகை விவரம் மற்றும் பள்ளி வாரியாக மாணவர்களின் எண்ணிக்கை விவரமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (Annexure II).

வட்டாரங்களுக்கு விடுவிக்கப்படுகின்ற தொகை உடனடியாக பள்ளிகளுக்கு மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப கணக்கிடப்பட்டு விடுவிக்கப்பட வேண்டும்.

அகப்பயிற்சிக்கான தொகை பள்ளிகளில் சரியான முறையில் உடனடியாக செலவினம் மேற்கொள்ளப்படுவதை கண்காணிக்க வேண்டும்.

Annexure III யில் கொடுக்கப்பட்டுள் அகப்பயிற்சிக்கான பொது வழிக்காட்டு நெறிமுறைகளை பள்ளிகளுக்கு தவறாமல் அனுப்பி அதிலுள்ளவைகள் அனைத்தையும் பின்பற்றப்பட வலியுறுத்த வேண்டும். பெற்றோர்களின் ஒப்புதலுடன் மட்டுமே அகப்பயிற்சிக்கு மாணவர்களை வெளியே அழைத்துச் செல்ல வேண்டும். அகப்பயிற்சியிக்கு அழைத்துச் செல்லும் பொழுது மாணவர்களின் பாதுகாப்பிற்கு தனி கவனம் பள்ளி தலைமையாசிரியர்களால் செலுத்தப்பட வேண்டும். அவர்களுடன் ஆசிரியர்கள் உடன் செல்ல வேண்டும்.

அகப்பயிற்சிக்கான பொதுவான வழிக்காட்டு நெறிமுறைகளிலுள்ள அனைத்தையும் பள்ளிகள் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும். மேலும் மாணவர்கள் அனைவரும் அகப்பயிற்சியினை அவர்கள் தொழிற்கல்வி பாடப்பிரிவிற்கேற்ப தகுந்த தொழிற்சாலைகள் / நிறுவனங்களை தேர்ந்தெடுத்து மேற்கொள்ளுவதையும் உறுதி செய்ய சார்ந்த வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர் ஒருங்கிணைப்பாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. அகப்பயிற்சி முடிவடைந்ததும் பள்ளி வாரியான அறிக்கை மாவட்ட திட்ட அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். வட்டார வளமையத்திலிருந்து உடனடியாக சம்மந்தப்பட்ட பள்ளியின் SNA வங்கிக் கணக்கிற்கு விடுவிக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

1. Annexure I–Student Hand Book – English / Tamil Medium.
2. Annexure II–Block wise breakup fund release for Internship.
3. Annexure III–Gudielines for Internship.

13/10/23

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
வேலூர் மாவட்டம்.

<u>பெறுநர்:</u>

1. சார்ந்த தலைமையாசிரியர் அரசு மேல்நிலைப் பள்ளி, வேலூர் மாவட்டம்.
2. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), அணைக்கட்டு, கீ.வ.குப்பம், கணியம்பாடி, காட்பாடி மற்றும் வேலூர் நகர் ஒன்றியங்கள், வேலூர் மாவட்டம்.

<u>நகல்:</u>

1. மாநில திட்ட இயக்குநர்அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது
2. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு
   தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம்.